மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் புதன்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி. தீபா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 426/2018 பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | |
|---|---|
| பெயர் .. மல்லிகா | வயது ..62 |
| க/பெ .. சகாதேவன் | சாதி .. |
| கிராமம் ..புத்தூர் | சமயம் .. |
| தாலுக்கா .. | தொழில் .. |

பி.வா.சா. 1 ( குறுக்கு விசாரணை தொடர்ச்சி )

1. நான் முந்தை குறுக்கு விசாரணையில் எனது வீட்டுகாரர் வாதி நீலாவதி மற்றும் ன்னனுடைய இரண்டு மகன்கள் மீது உயில் எழுதிவைத்ததை நான் எடுத்துவருகிறேன் என்று கூறினேன் அதை தாக்கல் செய்யதேனா என்றால் உயில் எதுவும் கிடைக்கவில்லை. சகாதேவன் அவர்கள் வாதி மற்றும் இரண்டு மகன்கள் தாமரைசெல்வன், கலையரசன் ஆகியோர் மீது உயில் 05.05.2006 தேதியிட்ட உயில் எழுதிவைத்தார் என்றால் அப்படி எதுவும் எனக்கு தெரியாமல் எழுதிவைத்து இருக்கமாட்டார்.

2. சகாதேவன் என்பவர் கையெழுத்து தெரியுமா என்றால் தெரியும். சகாதேவன் அவர்கள் உயில் எழுதிவைத்தாக கூறினேன் அந்த உயில் என்னவென்றால் நான் உயில் எழுதிவைத்தார் என்று கூறவில்லை நான் உயில் உள்ளதா என்று பார்க்கவேண்டும் என்று கூறினேன். சகாதேவன் அவர்கள் 5.05.2006 தேதியிட்ட உயிலில் வாதி அவரது மனைவி என்று குறிப்பிட்டுள்ளதால் தான் நான் இந்தஉயிலை தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள பிரதிவாதி பி.சா.ஆ.2ஆவணத்தில் உள்ள சகாதேவன் கையெழுத்தும், மேற்படி உயில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக உள்ளது என்பதால் மேற்படி

உயிலில் சகாதேவன் எழுதினார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தர்ககல் செய்த பிறகு வாதியுடன் சமாதான பேச்சு நடைபெற்றதா என்றால் இல்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3ல் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது, மேற்படி அசல் ஆவணம் என்னிடம் தான் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.5 என்னவென்றால் எனக்கு தெரியாது. எதற்காக நான் இந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன் எனக்கு தெரியாது என்றால் என் மகன்கள் தான் கவனித்துகொள்கிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.7 என்னவென்றால் எனக்கு தெரியாது. எதற்காக நான் இந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன் எனக்கு தெரியாது என்றால் என் மகன்கள் தான் கவனித்துகொள்கிறார்கள்.

5. மேலும் பி.சா.ஆ-7 ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளதா இல்லையா என்பது என் மகன்கள் தான் தெரியும். என் மகன்கள் கூறிதான் அனைத்து ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நேரடியாக தெரியாது என்றால் என் மகன்கள் கேட்டால் தான் தெரியும். பி.சா.ஆ.7 ஆவணம் பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. நான் நேரடியாக சான்றிதழ் பெற்றுஇருந்தால் பி.சா.ஆ.7 அசல் ஆவணம் தாக்கல் செயதுஇருப்பேன் என்றால் சரியல்ல.

6. வாரிசு சான்றிதழ் பி.சா.ஆ7 அசல் ஆவணம் இல்லாததால் என்னுடைய தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ6 சகாதேவன் அவர்களின் நிரந்தர முகவரி மற்றும் சகாதேவன் அவர்களின் இறந்த தருணத்தில் இருந்த முகவரியும் கேட்டுள்ளார்கள் மேறபடி சகாதேவன் அவர்களின் சொந்த ஊரான பெரியகரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ6 ல் சகாதேவன் அவர்களின் சொந்த ஊர் பெரியகரம் மறைத்து அவரின் இறப்பு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சகாதேவன் அவர்களின் இறந்த தருணத்தில் பெரியகரம் இருந்து வந்தார்களா என்றால் வந்தார்கள். சகாதேவன் அவர்களுடன் உடன் பிறந்தவர்கள் உயிரோடு இருந்தது யார் என்றால் அவர் அண்ணன் பரசுராமன் உள்ளார்.

8. பரசுராமன் அவர்களை விசாரித்தால் சகாதேவன் அவர்களுக்கு மேற்படி உயில் எழுதப்பட்ட விவரம், அவரது மனைவி யார் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

சகாதேவன் அவர்கள் இறந்தபிறகு அவரது பென்சன் எவ்வளவு வந்தது என்றால் பென்சன் ரூ.53,000/- வந்தது. சகாதேவன் இறந்த பிறகு எந்த மாதத்தில் இருந்து பென்சன் வாங்கிறார் என்றால் 20.01.2008 முதல் நான் பென்சன் வாங்குகிறேன்.

9. 2008 முதல் 2023 வரை எவ்வளவு பென்சன் வாங்கினிர் என்றால் நான் பார்த்து வந்து தான் கூறமுடியும்.

**( குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )**

*Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.*

*Sdl/-B.Salma.*

*District Munsif,*

*Polur.*